பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
03 07 2025 6 45
வியாழக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- இந்தியா – கானா இடையே ராணுவப் பயிற்சி, கடல்சார் பாதுகாப்பு, இணைவழி பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் உள்ள ஒருங்கிணைப்பு மேலும் வலுப்படுத்தப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர் இம்மாதம் 21ஆம் தேதி முதல் அடுத்த மாதம் 21ஆம் தேதி வரை நடைபெறும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.
- தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு மாநில அரசு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றி வருவதாக சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன் கூறியுள்ளார்.
- தமிழகத்தில் 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதி மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு கோரி விண்ணப்பித்தவர்களில் மதிப்பெண் மாற்றமுள்ள தேர்வர்களது பதிவெண்கள் பட்டியல் இன்று பிற்பகல் வெளியிடப்பட உள்ளது.
- இங்கிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்ட நேர இறுதியில் இந்தியா தமது முதல் இன்னிங்சில் 5 விக்கெட் இழப்புக்கு 310 ரன் எடுத்தது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

இந்தியா – கானா இடையே ராணுவப் பயிற்சி, கடல்சார் பாதுகாப்பு, இணைவழி பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் உள்ள ஒருங்கிணைப்பு மேலும் வலுப்படுத்தப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தமது 5 நாடுகள் பயணங்களின் ஒரு பகுதியாக நேற்றிரவு கானா சென்றடைந்த பிரதமரை விமான நிலையத்தில் அந்நாட்டு அதிபர் திரு. **John Dramani Mahama** வரவேற்றார்.

பின்னர் இரு தலைவர்களும் பிரதிநிதிகள் நிலையிலான பேச்சுகளில் ஈடுபட்டனர்.

அதைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், கானாவின் வளர்ச்சிப் பாதையில் இந்தியாவும் உறுதுணையாக இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கு இடையே வர்த்தகம், முதலீடு, வேளாண்மை, டிஜிட்டல் தொழில்நுட்பம், திறன் மேம்பாடு, உள்கட்டமைப்பு, மக்களுக்கு இடையேயான தொடர்பு உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரம், மருந்து உற்பத்தி, திறன் மேம்பாடு ஆகியவற்றில் கானாவிற்கு இந்தியா உதவுவதன் மூலம் கூட்டாண்மையை மேம்படுத்த உறுதிகொண்டுள்ளதாக அந்த கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இரு தலைவர்களுக்கு இடையேயான பேச்சுகளைத் தொடர்ந்து இந்தியா – கானா இடையே கலாச்சாரம், தரம், ஆயுர்வேதம் மற்றும் பாரம்பரிய மருத்துவம், கூட்டு ஆணையம் அமைத்தல் ஆகியவற்றில் ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

அதைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் கானா நாட்டின் உயரிய விருதை அந்நாட்டு அதிபர் திரு. **John Dramani Mahama** பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு வழங்கினார்.

<<<<>>>>

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர் இம்மாதம் 21ஆம் தேதி முதல் அடுத்த மாதம் 21ஆம் தேதி வரை நடைபெறும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு, நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடரை நடத்துவதற்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திர தினக் கொண்டாட்டங்களை ஒட்டி அடுத்த மாதம் 13 மற்றும் 14ஆம் தேதிகளில் அவை நடைபெறாது என்றும் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு மாநில அரசு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றி வருவதாக சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன் கூறியுள்ளார்.

தூத்துக்குடியில் நடைபெற்ற ‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கம் என்ற கூட்டத்தில் பேசிய அவர், நமது மொழி வாயிலாக ‘நாம் ஓரணியில்’ என்ற முன்முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக மத்திய அரசு 113 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதாக அவர் கூறினார்.

அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் இந்த ஆண்டு தமிழகத்தைச் சேர்ந்த அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் குடிமைப் பணி தேர்வில் வெற்றி பெற்றுள்ளதாக கூறினார்.

மாநிலத்தில் தனிநபர் வருமானம் அதிகரித்துள்ளது என்றும், மக்களின் வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது என்றும் திருமதி கீதா ஜீவன் தெரிவித்தார்.

<<<<>>>>

பிரதமரின் சுய வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

இதன் மூலம் தாம் பெரும் பயனடைந்ததாக வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதி மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு கோரி விண்ணப்பித்தவர்களில் மதிப்பெண் மாற்றமுள்ள தேர்வர்களது பதிவெண்கள் பட்டியல் இன்று பிற்பகல் வெளியிடப்பட உள்ளது.

இதுகுறித்து அரசு தேர்வுகள் இயக்ககம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் இதனை அறிந்துகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பட்டியலில் இடம்பெறாத பதிவெண்களுக்கான விடைத்தாள்களில் எவ்வித மதிப்பெண் மாற்றமும் இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

மறுகூட்டல் மற்றும் மறு மதிப்பீட்டில் மதிப்பெண் மாற்றமுள்ள தேர்வர்கள் மட்டும் இந்த இணையதளதில் தங்களது விவரங்களைப் பதிவு செய்து, திருத்தப்பட்ட மதிப்பெண்கள் அடங்கிய

தற்காலிக மதிப்பெண் பட்டியலை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்று அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

சேலம் மாவட்டத்தில் தனியார் தொலைக்காட்சி செய்தியாளர் மற்றும் ஒளிப்பதிவாளரை தாக்கியவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ் மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஜலகண்டாபுரம், வலசையூர், அடிமலைப்புதூர் உள்ளிட்ட பகுதிகளில் சட்டவிரோதமாக செம்மண் வெட்டி கடத்தப்படுவது குறித்து செய்தி சேகரிக்கச் சென்றவர்கள் மீது கொடூரமான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இதில் செய்தியாளர் காது கேட்கும் திறனை இழந்துவிட்டதாகவும், ஜனநாயகத்தின் நான்காவது தூணைச் சேர்ந்தவர்கள் மீது நடத்தப்பட்ட இத்தாக்குதல் கண்டிக்கத்தக்கது என்றும் தெரிவித்துள்ளார்.

எனவே இத்தகைய செயலில் ஈடுபட்டவர்கள் மீது மாநில அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திரு. அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

அமெரிக்காவுடனான இந்தியாவின் உறவு பாகிஸ்தானால் பாதிக்கப்படாது என்று வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

<<<<>>>>

மாலி தீவில் கடத்தப்பட்ட 3 இந்திய தொழிலாளர்களை மீட்பது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இலங்கை தலைநகர் கொழும்பில் உள்ள **General Sir John Kotelawala** பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் ஹிந்தி மொழி கற்றல் திட்டம் தொடர்பாக அப்பல்கலைக்கழகம் மற்றும் சுவாமி விவேகானந்தா கலாச்சார மையம் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது.

<<<<>>>>

அமர்நாத் புனித யாத்திரை பஹல்காமில் இருந்தும், பல்தால் பகுதியில் இருந்தும் இன்று தொடங்குகிறது.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீர் கிஸ்துவார் மாவட்டம் சத்ரு பகுதியில் மறைந்திருந்த தீவிரவாதிகள் மீது காவல்படையினர் நேற்று தாக்குதல் நடத்தினர்.

<<<<>>>>

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி கழுமலையாற்றில் குறுவை சாகுபடிக்காக பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது.

<<<<>>>>

திருப்பூரில் அரசுப் போக்குவரத்து ஊழியர்களுக்கு போக்குவரத்து விதிமுறைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

<<<<>>>>

தூத்துக்குடி மாவட்டத்தில் தனியார் அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களில் 10க்கும் மேற்பட்ட ஆண், பெண் பணிபுரியும் இடங்களில் பாலியல் வன்கொடுமைகளில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் நோக்கில் புகார் குழு அமைத்திட வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் திரு. இளம் பகவத் அறிவுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

விழுப்புரம் அரசு கலைக்கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் போக்குவரத்து பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு காவல்துறையினர் மூலம் ஏற்படுத்தப்பட்டது.

<<<<>>>>

முன்னாள் படை வீரர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம் தாம்பரத்தில் உள்ள இந்திய விமானப்படைத் தளத்தில் நாளை நடைபெறுகிறது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இங்கிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்ட நேர இறுதியில் இந்தியா தமது முதல் இன்னிங்சில் 5 விக்கெட் இழப்புக்கு 310 ரன் எடுத்தது.

பர்மிங்ஹாமில் நடைபெற்ற இப்போட்டியில் கேப்டன் சுப்மன் கில் 114 ரன்னுடனும், ரவீந்திர ஜடேஜா 41 ரன்னுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

<<<<>>>>

இங்கிலாந்துக்கு எதிரான 3வது இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நார்தாம்டனில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 40 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 268 ரன் எடுத்தது.

269 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி, 34 புள்ளி 3 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 274 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

அதிகபட்சமாக வைபவ் சூர்யவன்ஷி, 31 பந்துகளில் 86 ரன் எடுத்தார்.

<<<<>>>>

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் எலிமினேட்டர் சுற்றில் திண்டுக்கல் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் திருச்சி அணியை வென்று இரண்டாவது தகுதிச் சுற்றுக்கு முன்னேறியது.

<<<<>>>>

அஸ்தானாவில் நடைபெற்று வரும் உலக குத்துச்சண்டைப் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியாவின் மீனாட்சி, பூஜா ராணி ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

இதன் மூலம் இந்தியாவிற்கு 2 பதக்கங்கள் உறுதியாகியுள்ளது.

<<<<>>>>

கனடா ஓபன் பேட்மிண்டன் போட்டியின் இந்தியாவின் எஸ்.எம். சுப்ரமணியன், கிடாம்பி ஸ்ரீகாந்தும், ஷ்ரேயான்ஷி வலிஷெட்டியும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

<<<<>>>>

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் யூகி பாம்ரி – அமெரிக்காவின் **Golloway** இணை இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

<<<<>>>>